सत्यमेव जयते

# भारत का राजपत्र
# The Gazette of India
# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका

New Delhi, Monday, 6th March 2000/1922 Saga

*புது தில்லி, 2000, மார்ச் 6ஆம் நாள் திங்கட்கிழமை/1922 சக*

---

The translation in Tamil of The Interest Tax Act, 1974 (45 of 1974), The Hindu Gains of Learning Act, 1930 (30 of 1930) The Government Seal Act, 1862 (3 of 1862), The Foreigners Act, 1946 (31 of 1946), The Agricultural Produce Cess Act, 1940 (27 of 1940), The Protection of Human Rights Act, 1993 (10 of 1994), The Prevention of Corruption Act, 1988 (49 of 1988), The Cess and Other Taxes on minerals (Validation) Act, 1992 (16 of 1992), The Architects Act, 1972 (20 of 1972) The Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973), The Benami Transactions (Prohibition) Act, 1988 (45 of 1988) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50/1973).

*வட்டிவரிச் சட்டம், 1974 (45/1974), இந்துக் கல்விவழி ஈட்டியச் சொத்துச் சட்டம், 1862 (30/1862), அரசாங்க இலச்சினைச் சட்டம், 1862 (3/1862), அயல்நாட்டினர் சட்டம், 1946 (31/1946), வேளாண் விளைபொருள் மேல்வரிச் சட்டம், 1940 (27/1940), மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993 (10/1994), ஊழல் தடுப்புச் சட்டம், 1988 (49/1988), கனிமங்கள் மீதான மேல்வரி மற்றும் பிறவரிகள் (செல்லுந்தன்மையுடையதாக்குதல்) சட்டம், 1992 (16/1992), கட்டடக் கலைஞர்கள் சட்டம், 1972 (20/1972), அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973), பெயரிரவல் நடவடிக்கைகள் (தடைசெய்தல்) சட்டம், 1988 (45/1988) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியானவாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*

[Price Rs. 52.00

# அயல் நாட்டினர் சட்டம், 1946

(சட்ட எண் 31/1946)

[1946, நவம்பர் 23]

*அயல் நாட்டினரைப் பொறுத்து குறித்தசில அதிகாரங்களை மைய அரசாங்கத்திற்கு வழங்குவதற்கான ஒரு சட்டம்.*

இந்தியாவிற்குள் அயல்நாட்டினர் நுழைவதை, அதில் அவர்கள் இருப்பதை மற்றும் அதிலிருந்து அவர்கள் வெளியேறுவதைப் பொறுத்து குறித்தசில அதிகாரங்களை மைய அரசாங்கம் செலுத்துவதற்காக வகைசெய்வது உகந்ததாக இருப்பதால்,

பின்வருமாறு ஈங்கிதனால் சட்டமியற்றப்படுகிறது:—

*குறுந்தலைப்பும் அளாவுகையும்.*

1. (1) இந்தச் சட்டம், அயல் நாட்டினர் சட்டம், 1946 என்று வழங்கப்பெறும்.

(2) இது [1][***] [2][இந்தியா] முழுவதையும் அளாவி நிற்கும்.

*பொருள் வரையறைகள்.*

2. இந்தச் சட்டத்தில்,—

(அ) "அயல் நாட்டினர்" என்பது, இந்தியாவின் குடிமகன் அல்லாத ஒருவர் என்று பொருள்படும்;

(ஆ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் வாயிலாக வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(இ) "குறித்துரைக்கப்பட்ட" என்பது, வகுத்துரைக்கப்பட்ட ஓர் அதிகார அமைப்பின் பணிப்புரையின் வாயிலாக குறித்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்.

*ஆணைகள் பிறப்பிக்க அதிகாரம்.*

3. (1) மைய அரசாங்கம், [2][இந்தியா]விற்குள் அயல் நாட்டினர் நுழைவதை அல்லது அதிலிருந்து அவர்கள் வெளியேறுவதை அல்லது அதில் அவர்கள் இருப்பதை அல்லது தொடர்ந்து இருப்பதைத் தடை செய்வதற்காக, ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக அல்லது கட்டுப்படுத்துவதற்காக பொதுவாகவோ அல்லது அயல் நாட்டினர் அனைவரையும் பொறுத்தோ அல்லது குறிப்பிட்ட அயல் நாட்டினர் எவரையும் அல்லது அயல் நாட்டினரின் வகுத்துரைக்கப்பட்ட வகை அல்லது விவரிப்பு எதனையும் பொறுத்தோ [4][ஆணை] வாயிலாக வகை செய்யலாம்.

1. 1950ஆம் ஆண்டு இணைக்க ஆணையினால் புகுத்தப்பட்ட 'ஹைதராபாத் மாநிலம் தவிர' என்ற சொற்கள், 3/1951 சட்டத்தின் பிரிவு 3 மற்றும் இணைப்புப் பட்டியலினால் விட்டுவிடப்பட்டன.
2. 38/1947 சட்டத்தின் பிரிவு 2 ஆல் "பிரிட்டிஷ் இந்தியா" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.
3. 11/1957 சட்டத்தினால் மாற்றாக அமைக்கப்பட்டது.
4. அயல்நாட்டினர் ஆணை, 1948 க்காக இந்திய அரசிதழ் 1948 பகுதி I பக்கம் 198ஐ பார்க்கவும்

(2) குறிப்பாகவும், முன்சென்ற அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும் இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணைகள், அந்த அயல் நாட்டினர்—

(அ) [1][இந்தியா]விற்குள் நுழைதல் ஆகாது, அல்லது வகுத்துரைக்கப்படலாகும் காலங்களில் மற்றும் அத்தகைய வழியின் மூலம் மற்றும் அத்தகைய துறைமுகத்தில் அல்லது இடத்தில் மட்டுமே மற்றும் வந்து சேர்ந்ததன்பேரில் வகுத்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளைக் கடைப்பிடிப்பதற்கு உட்பட்டு இந்தியாவிற்குள் நுழைதல் வேண்டும் என்று;

(ஆ) [1][இந்தியா]விலிருந்து வெளியேறுதல் ஆகாது, அல்லது வகுத்துரைக்கப்படலாகும் காலங்களில் மற்றும் அத்தகைய வழியின் மூலம் மற்றும் அத்தகைய துறைமுகம் அல்லது இடத்திலிருந்து மட்டுமே மற்றும் வெளியேறுவதன்பேரில் வகுத்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளைக் கடைப்படிப்பதற்கு உட்பட்டு வெளியேறுதல் வேண்டும் என்று;

(இ) [1][இந்தியா]வில் அல்லது வகுத்துரைக்கப்பட்ட அதன் பகுதி எதிலும் தங்கியிருத்தல் ஆகாது என்று;

[2][(இஇ) இந்தியாவில் தங்கியிருத்தல் ஆகாது என்று இந்தப் பிரிவின்படியான ஆணை வாயிலாக அவர் வேண்டுறுத்தப்பட்டிருப்பாராயின், இந்தியாவிலிருந்து அவரை அகற்றுவதற்கான செலவுக்கு மற்றும் அத்தகைய அகற்றுதல் செய்யப்படும் வரையில், அங்கு அவரைப் பேணுவதற்கான செலவினை அவரிடமுள்ள வளவசதிகள் எவற்றிலிருந்தும் கொடுத்தல் வேண்டும் என்று;]

(ஈ) இந்தியாவில் வகுத்துரைக்கப்படலாகும் பகுதிக்கு அவர் அகற்றப்பட்டு அங்கு தங்கியிருத்தல் வேண்டும் என்று;

(உ) (i) குறிப்பிட்ட இடம் ஒன்றில் குடியிருக்குமாறு அவரை வேண்டுறுத்துகிற;

(ii) அவருடைய நடமாட்டங்களின்மீது கட்டுப்பாடுகள் எவற்றையும் விதிக்கிற;

(iii) வகுத்துரைக்கப்படலாகும் அல்லது குறித்துரைக்கப்படலாகும் முறையிலும் காலத்திலும், இடத்திலும், அத்தகைய அதிகார அமைப்பிற்கு அவருடைய அடையாளத்திற்கான மெய்ப்பிப்பை அளிக்குமாறும் அத்தகைய விவரங்களை அறிக்கை செய்யுமாறும் அவரை வேண்டுறுத்துகிற;

(iv) வகுத்துரைக்கப்படலாகும் அல்லது குறித்துரைக்கப்படலாகும் அதிகார அமைப்பிற்கும் அத்தகைய காலத்திலும் இடத்திலும் அவருடைய ஒளிப்படத்தையும் விரல் பதிவுகளையும் எடுப்பதற்கு இடங்கொடுக்குமாறும் மற்றும் அவருடைய கையெழுத்தின் மற்றும் கையொப்பத்தின் மாதிரிகளைக் கொடுக்குமாறும் அவரை வேண்டுறுத்துகிற;

(v) வகுத்துரைக்கப்படலாகும் அல்லது குறித்துரைக்கப்படலாகும் அதிகார அமைப்பால் அத்தகைய காலத்திலும் இடத்திலும் செய்யப்படும் மருத்துவ ஆய்விற்குத் தம்மை உட்படுத்திக் கொள்ளுமாறு அவரை வேண்டுறுத்துகிற;

(vi) வகுத்துரைக்கப்பட்ட அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒரு விவரிப்பையுடையவர்களோடு சேர்ந்து பழகுவதைத் தடை செய்கிற;

(vii) வகுத்துரைக்கப்பட்ட அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒரு விவரிப்பையுடைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து அவரைத் தடை செய்கிற;

(viii) வகுத்துரைக்கப்பட்ட அல்லது குறித்துரைக்கப்பட்ட பொருள்களைப் பயன்படுத்துவதிலிருந்து அல்லது உடைமையில் கொண்டிருப்பதிலிருந்து அவரைத் தடை செய்கிற;

(ix) வகுத்துரைக்கப்படலாகும் அல்லது குறித்துரைக்கப்படலாகும் நுணுக்க விவரம் எதிலும் அவருடைய நடத்தையைப் பிறவாறு ஒழுங்குமுறைப்படுத்துகிற;

வகுத்துரைக்கப்படலாகும் அல்லது குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும் என்று;

---

1. 38/1947 சட்டத்தின் பிரிவு 2ஆல் "பிரிட்டிஷ் இந்தியா" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.
2. மேற்படி சட்டத்தின் பிரிவு 4 ஆல் புகுத்தப்பட்டது

(ஊ) வகுத்துரைக்கப்பட்ட அல்லது குறித்துரைக்கப்பட்ட வரைத்தடைகள் அல்லது வரைக்கட்டுகள் எவற்றையும் அல்லது எல்லாவற்றையும், உரியவாறு கடைப்பிடிப்பதற்காக அல்லது செயற்படுத்துவதற்கு மாற்றாக இருக்குமாறு பிணையிருடனோ இல்லாமலோ ஒரு முறி எழுதிக் கொடுத்தல் வேண்டும் என்று;

[1][(எ) கைது செய்யப்பட்டு இருத்திவைக்கப்படுதல் அல்லது துடைத்து வைக்கப்படுதல் வேண்டும் என்று;]

வகை செய்யலாம். [2][மேலும், வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பொருட்பாடு எதற்காகவும்,] மைய அரசாங்கத்தின் கருத்தில், இந்தச் சட்டத்திற்குச் செல்திறமளிப்பதற்கு உகந்ததாக அல்லது தேவையானதாக இருக்கலாகும் சார்வுறு மற்றும் துணைவுறு பொருட்பாடுகளுக்காகவும் வகைசெய்யலாம்.

[3][(3) இதற்கென வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பு எதுவும், குறிப்பிட்ட அயல் நாட்டினர் எவரையும் பொறுத்து உட்பிரிவு (2)இன் கூறு (உ) அல்லது கூறு (ஊ)இன்படி ஆணைகள் பிறப்பிக்கலாம்.]

குறித்தசில நேர்வுகளில் சட்டம் பொருந்துவதிலிருந்து தன்னுரிமையுடைய கூட்டரசு நாடுகளின் குடிமக்கள் மற்றும் பிறருக்கு விலக்களிக்க அதிகாரம்.

[4][3 (அ) (1) மைய அரசாங்கம் ஆணை வாயிலாக அந்த ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் சூழ்நிலைகளில் அல்லது அத்தகைய விதிவிலக்குகளுடன் அல்லது மாற்றமைவுகளுடன் மட்டுமே அல்லது அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு,—

(அ) அவ்வாறு குறித்துரைக்கப்படலாகும் தன்னுரிமையுடைய கூட்டரசு நாடு எதனின் குடிமக்களுக்கும் அல்லது குடிமக்கள் தொடர்பாக, அல்லது

(ஆ) எவரேனும் பிற தனிப்பட்ட அயல் நாட்டினர் அல்லது அயல் நாட்டினரின் பிற ஏதேனும் வகை அல்லது விவரிப்பு தொடர்பாக

இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனின் வகையங்கள் அனைத்தும் அல்லது அவற்றில் எவையும் பொருந்துதலாகாது அல்லது பொருந்துதல் வேண்டும் என்று விளம்பலாம்.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஒவ்வோர் ஆணையின்படியும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, எவ்வளவு விரைவில் கூடுமோ அவ்வளவு விரைவில், நாடாளுமன்ற ஈரவைகளின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

தடுப்புக் காவலில் உள்ள

4. [5][(1) எந்த அயல்நாட்டினரைப் பொறுத்து, அவர் இருத்திவைக்கப்படுதல் வேண்டும் அல்லது அடைத்து வைக்கப்படுதல் வேண்டும் என்று பணிக்கிற, பிரிவு 3இன் உட்பிரிவு (2)இன் கூறு (எ)இன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும் செல்லாற்றலில் உள்ளதோ (இதில் இதற்குப் பின்பு தடுப்புக் காவலில் உள்ள ஒருவர் என்று குறிப்பிடப்படும்) அந்த அயல்நாட்டினர் எவரும், மைய அரசாங்கம், அவ்வப்போது, ஆணை வாயிலாகத் தீர்மானிக்கலாகும் இடத்திலும் முறையிலும் மற்றும் பேணுவதற்கான, ஒழுங்குக் கட்டுப்பாட்டிற்கான மற்றும் குற்றச்செயல்களின் தண்டனைக்கான மற்றும் ஒழுங்குக் கட்டுப்பாட்டின் மீறுகைக்கான வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, இருத்திவைக்கப்படுதல் அல்லது அடைத்து வைக்கப்படுதல் வேண்டும்.]

(2) எந்த அயல்நாட்டினரைப் பொறுத்து, அயல்நாட்டினர் பலரின் மேற்பார்வையின்கீழ் குடியிருப்பதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் அவரைக் குடியிருக்க வேண்டுறுத்துகிற, பிரிவு 3இன் உட்பிரிவு (2)இன் கூறு (உ)வின்படியான ஆணை ஒன்று செல்லாற்றலில் உள்ளதோ (இதில் இதற்குப் பின்பு வாய்மொழி உறுதியின்பேரில் விடப்பட்டவர்கள் என்று குறிப்பிடப்படும்) அந்த அயல்நாட்டினர் எவரும், அதில் குடியிருந்து வருகையில், மைய அரசாங்கம், அவ்வப்போது ஆணை வாயிலாகத் தீர்மானிக்கலாகும், பேணுதற்கான, ஒழுங்குக் கட்டுப்பாட்டிற்கான மற்றும் குற்றங்களின் தண்டனைக்கான மற்றும் கட்டுப்பாட்டின் மீறுகைகளுக்கான வரைக்கட்டுகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

---

1. 42/1962 சட்டத்தின் பிரிவு 3 ஆல் புகுத்தப்பட்ட முந்தைய அடைப்புக்குறிகள், எழுத்து மற்றும் சொற்கள் (ஊ) கைது செய்யப்படுதல் மற்றும் இருத்தி வைக்கப்படுதல் அல்லது அடைத்து வைக்கப்படுதல் வேண்டும்" என்பன 11/1957 சட்டத்தின் பிரிவு 3 ஆல் (19-1-1957 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டன.
2. 58/1947 சட்டத்தின் பிரிவு 4 ஆல் புகுத்தப்பட்டது.
3. 11/1957 சட்டத்தின் பிரிவு 3 ஆல் கூறு (ஐ) அல்லது கூறு (ஊ) என்பதற்கு மாற்றாக (19-1-1957 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.
4. மேற்படி சட்டத்தின் பிரிவு 4 ஆல் புகுத்தப்பட்டது (19-1-1957 முதல் செல்திறம் பெறுமாறு)
5. 42/1962 சட்டத்தின் பிரிவு 3 ஆல் புகுத்தப்பட்ட முந்தைய உட்பிரிவு (1), 11/1957 சட்டத்தின் பிரிவு 5 ஆல் (19-1-1957 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.

[1] [(3) எவரும்,—

(அ) தடுப்புக் காவலில் உள்ள ஒருவருக்கு அல்லது வாய்மொழி உறுதியின்பேரில் விடப்பட்ட ஒருவருக்குப் பாதுகாப்பிலிருந்து அல்லது அவர் குடியிருப்பதற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட இடத்திலிருந்து தப்பியோடுவதற்கு அறிந்தே உதவுதல் அல்லது தப்பியோடிய தடுப்புக் காவலில் உள்ள ஒருவருக்கு அல்லது வாய்மொழி உறுதியின்மேல் விடப்பட்டவர் ஒருவருக்கு அறிந்தே புகலளித்தல் ஆகாது.

(ஆ) தடுப்புக் காவலில் உள்ளவரை அல்லது வாய்மொழி உறுதியின் மேல் விடப்பட்டவரைக் கைது செய்வதைத் தடுக்கும், தடை செய்யும் அல்லது அதில் தலையிடும் உட்கருத்துடனான உதவி எதையும், தப்பியோடிய தடுப்புக்காவலில் உள்ளவருக்கு அல்லது வாய்மொழி உறுதியின்மேல் விடப்பட்டவருக்கு அளித்தல் ஆகாது.

(4) மைய அரசாங்கம், இருத்தி வைக்கப்பட்டிருக்கிற அல்லது, நேர்வுக்கேற்ப, கட்டுப்படுத்தப்பட்டிருக்கிற தடுப்புக் காவலில் உள்ளவர்கள் அல்லது வாய்மொழி உறுதியின்பேரில் விடப்பட்டவர்கள், இந்தியாவில் உள்ள இடங்களுக்கு வந்து போவதை மற்றும் அவர்களின் நடத்தையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காகவும், அத்தகைய இடங்களுக்கு அல்லது அதில் தடுப்புக் காவலில் உள்ளவர்களுக்காக அல்லது வாய்மொழி உறுதியின்பேரில் விடப்பட்டவர்களுக்காக வகுத்துரைக்கப்படலாகும் பொருள்களை வெளியிலிருந்து அனுப்புதலை அல்லது எடுத்துச் சொல்லுதலைத் தடை செய்வதற்காகவும் அல்லது ஒழுங்குமுறைப்படுத்துவதற்காகவும் ஆணையின் வாயிலாக வகைசெய்யலாம்.

5. (1) இந்தச் சட்டம் எந்தத் தேதியில் செல்லாற்றலுக்கு வந்ததோ அந்தத் தேதியில், [2][இந்தியா]வில் இருந்த அயல்நாட்டினர் எவரும், அந்தத் தேதிக்குப் பின்பு, [2][இந்தியா]வில் இருக்கையில், சொல்லப்பட்ட தேதிக்கு அடுத்து முன்பு எந்தப் பெயரால் அவர் வழக்கமாக அறியப்பட்டிருந்தாரோ அந்தப் பெயர் அல்லாத பிற பெயர் எதையும், நோக்கம் எதற்காகவும் புனைந்துகொள்ளுதலோ அல்லது பயன்படுத்துதலோ அல்லது புனைந்துகொள்ளுவதாக அல்லது பயன்படுத்துவதாகப் புலப்படுத்தலோ ஆகாது. பெயர் மாற்றம்.

(2) இந்தச் சட்டம் எந்தத் தேதியில் செல்லாற்றலுக்கு வந்ததோ அந்தத் தேதிக்குப் பின்பு, அயல்நாட்டினர் எவரும், சொல்லப்பட்ட தேதிக்கு அடுத்து முன்பு எந்தப் பெயர் அல்லது வணிகப் பெயரின்கீழ் அந்த வாணிகம் அல்லது தொழில் நடத்தப்பட்டு வந்ததோ, அந்தப் பெயர் அல்லது வணிகப் பெயர் அல்லாத பிற பெயர் அல்லது வணிகப் பெயர் எதனின்கீழும் (தனியாகவாயினும் அல்லது பிற எவரோடும் ஒன்று சேர்ந்தாயினும்) வணிகம் அல்லது ஆகு தொழில் எதையும் நடத்தி வருகிறவிடத்து அல்லது நடத்தி வருவதாகப் புலப்படுகிறவிடத்து, உட்பிரிவு (1)இன் நோக்கங்களைப் பொறுத்தவரையில் சொல்லப்பட்ட தேதிக்கு அடுத்து முன்பு எந்த ஒரு பெயரால் அவர் வழக்கமாக அறியப்பட்டிருந்தாரோ அந்தப் பெயர் அல்லாத பிற பெயரை அவர் பயன்படுத்தி வருவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டம் எந்தத் தேதியில் செல்லாற்றலுக்கு வந்ததோ அந்தத் தேதியில் [2][இந்தியா]வில் இல்லாதிருந்து, அதன் பின்பு, [2][இந்தியா]வில் நுழைகிற அயல்நாட்டினர் எவர் தொடர்பாகவும், உட்பிரிவுகள் (1), (2) ஆகியவற்றில் எந்தத் தேதியில் இந்தச் சட்டம் செல்லாற்றலுக்கு வந்தது என்பது பற்றிய சுட்டுகை எதற்காகவும், அதன் பின்பு, [2][இந்தியா]வில் எந்தத் தேதியில் அவர் முதலாவதாக நுழைகிறாரோ அந்தத் தேதி பற்றிய சுட்டுகை மாற்றாக அமைக்கப்பட்டாற்போன்று, அந்த உட்பிரிவுகள் செல்லாற்றலுக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தப் பிரிவின் நோக்கங்களைப் பொறுத்தவரையில்,—

(அ) "பெயர்" என்னும் சொல், குடும்பப் பெயரையும் உள்ளடக்கும், மற்றும்

(ஆ) ஒரு பெயரின் எழுத்துக் கூட்டுருவில் மாற்றம் செய்யப்படுமாயின், அந்தப் பெயர் மாற்றப்படுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) இந்தப் பிரிவிலுள்ள எதுவும்,—

(அ) மைய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட [3][***]உரிமம் அல்லது அனுமதியை தொடர்ந்து ஏதேனும் பெயரை, அல்லது

(ஆ) திருமணமான பெண் எவரும் தம்முடைய கணவனின் பெயரை புனைந்துகொள்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு பொருந்துதல் ஆகாது.

---

1. 12/1962 சட்டத்தின் பிரிவு 3 ஆல், உட்பிரிவு (3) மற்றும் (4)க்கு மாற்றாக அமைக்கப்பட்டது.
2. 38/1947 சட்டத்தின் பிரிவு 2 ஆல் "பிரிட்டிஷ் இந்தியா" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.
3. "ராயல்" என்ற சொல் 11/1957 சட்டத்தின் பிரிவு 6 ஆல் (19-1-1957 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.

கலங்கள் முதலானவற்றின் முதல்வர்களின் கடமைப் பொறுப்புகள்.

6. (1) [1][இந்தியா]விலுள்ள துறைமுகத்திற்குக் கடல்வழியாக வரும் அல்லது அதிலிருந்து போகும் பயணிகளை அந்தத் துறைமுகத்தில் இறக்கும் அல்லது ஏற்றும் ஏதேனும் கலத்தின் முதல்வர் மற்றும் [1][இந்தியா]விலுள்ள இடம் எதற்கும் வான்வழியாக வரும் அல்லது அதிலிருந்து போகும் பயணிகளை அந்த இடத்தில் இறக்கும் அல்லது ஏற்றும் ஏதேனும் வானூர்தி ஓட்டுநர், வகுத்துரைக்கப்படலாகும் எவருக்கு, அத்தகைய முறையில், அயல்நாட்டினர்களாகிய பயணிகள் அல்லது பணிமக்குழு உறுப்பினர்கள் எவரையும் பொறுத்து வகுத்துரைக்கப்பட்ட விவரங்களைக் கொண்ட விவர அறிக்கை ஒன்றைக் கொடுத்தல் வேண்டும்.

(2) மாவட்டக் குற்றவியல் நடுவர் எவரும் மற்றும் காவல் துறை ஆணையர் எவரும் அல்லது அங்குக் காவல்துறை ஆணையர் எவரும் இல்லாதவிடத்து, காவல் துறைக் கண்காணிப்பாளர் எவரும், இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆணையைச் செயற்படுத்துதல் தொடர்புடைய நோக்கம் எதற்காகவும், அத்தகைய ஏதேனும் கலத்தின் முதல்வரை அல்லது அத்தகைய ஏதேனும் வானூர்தி ஓட்டுநரை, அத்தகைய கலத்தின் அல்லது, நேர்வுக்கேற்ப, வானூர்தியின் பயணிகள் அல்லது பணிமக்குழு உறுப்பினர்களைப் பொறுத்து வகுத்துரைக்கப்படலாகும் தகவலைக் கொடுக்குமாறு வேண்டுறுத்தலாம்.

(3) அத்தகைய கலத்தின் அல்லது வானூர்தியின் பயணி எவரும் மற்றும் அத்தகைய கலத்தின் அல்லது வானூர்தியின் பணிமக்குழு உறுப்பினர் எவரும், கலத்தின் முதல்வருக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, வானூர்தி ஓட்டுநருக்கு உட்பிரிவு (1)இல் கட்டப்பட்ட விவர அறிக்கையைக் கொடுக்கும் நோக்கத்திற்காக அல்லது உட்பிரிவு (2)இன்படி வேண்டுறுத்தப்பட்ட தகவலைக் கொடுப்பதற்காக அவரால் வேண்டுறுத்தப்பட்ட தகவல் எதையும் கொடுத்தல் வேண்டும்.

[2][(4) அயல்நாட்டினர் எவரும், இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஏதொன்றின் வரையம் எதையும் மீறி, இந்தியாவிற்குள் நுழைவாராயின், வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பானது, அத்தகைய நுழைவுத் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் எந்தக் கலத்தின் அல்லது வானூர்தியின் மூலம் அவ்வாறு நுழைந்தாரோ அந்தக் கலத்தின் முதல்வரை அல்லது வானூர்தி ஓட்டுநரை அல்லது அத்தகைய கலத்தின் அல்லது வானூர்தியின் உரிமையாளரை அல்லது உரிமையாளரின் முகவரை, சொல்லப்பட்ட அதிகார அமைப்பு தெளிவுறக் காணுமாறு மற்றும் அரசாங்கச் செலவு அல்லாமல் பிறவாறாக சொல்லப்பட்ட அயல்நாட்டினரை இந்தியாவிலிருந்து அகற்றும் நோக்கத்திற்காகக் கலம் அல்லது வானூர்தியில் இடவசதி அளிக்குமாறு பணிக்கலாம்.

(5) எந்தக் கலம் அல்லது வானூர்தி இந்தியாவிலுள்ள ஒரு துறைமுகத்திலிருந்து அல்லது இடத்திலிருந்து பயணிகளை இந்தியாவிற்கு வெளியேயுள்ள சேருமிடம் எதற்கும் ஏற்றிச் செல்லும் நிலையில் இருக்கிறதோ அந்தக் கலம் எதனின் முதல்வரும் அல்லது வானூர்தி எதனின் ஓட்டுநரும் அல்லது அத்தகைய கலம் அல்லது வானூர்தி எதனின் உரிமையாளரும் அல்லது உரிமையாளரின் முகவரும், இந்தியாவில் தொடர்ந்து இருக்கலாகாது என்று பிரிவு 3இன்படி ஆணையிடப்பட்ட அயல்நாட்டினர் எவருக்காகவும், அவருடன் பயணம் செய்யும் அவரைச் சார்ந்தவர்கள், எவரேனும் இருப்பின், அவர்களுக்காகவும், மைய அரசாங்கம் குறித்துரைக்கலாகும் எந்தத் துறைமுகத்தில் அல்லது இடத்தில் அந்தக் கலம் அல்லது வானூர்தி சேரக்கூடுமோ அல்லது இறங்கக்கூடுமோ அந்தத் துறைமுகமாக அல்லது இடமாக இருக்கிற இந்தியாவிற்கு வெளியேயுள்ள துறைமுகத்திற்கு அல்லது இடத்திற்குச் செல்ல கலம் அல்லது வானூர்தியில் இடவசதி அளித்தல் வேண்டும் என்று மைய அரசாங்கம் அவ்வாறு பணித்திருக்குமாயின், மற்றும் அப்போதுள்ள கட்டணத்தையும் அதற்கான செலுத்தத்தைச் செய்ய முற்படுவதன்பேரில், அவ்வாறு செய்தல் வேண்டும்.]

---

1. 38/1947 சட்டத்தின் பிரிவு 2 ஆல், "பிரிட்டிஷ் இந்தியா" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.
2. 38/1947 சட்டத்தின் பிரிவு 5 ஆல் உட்பிரிவுகள் (4) மற்றும் (5) புகுத்தப்பட்டன மற்றும் முதன்முதலிலிருந்த உட்பிரிவு (5) ஆனது (6) ஆக மறு எண்ணிடப்பட்டது.

[1][(6) இந்தப் பிரிவின் நோக்கங்களைப் பொறுத்தவரையில்,—

(அ) "ஒரு கலத்தின் முதல்வர்" மற்றும் "ஏதேனும் வானூர்தி ஓட்டுநர்" என்பது அத்தகைய முதல்வரால் அல்லது நேர்வுக்கேற்ப, ஓட்டுநரால் இந்தப் பிரிவின்மூலம் அவருக்கு விதிக்கப்பட்ட கடமைகளில் எவற்றையும் அவர் சார்பாக நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள எவரையும் உள்ளடக்கும்;

(ஆ) "பயணி" என்பது, ஒரு கலம் அல்லது வானூர்தியில் பயணம் செய்யும் அல்லது பயணம் செய்ய நாடும், பணிமக்குழுவின் உண்மை உறுப்பினராக இராத, எவரும் என்று பொருள்படும்.]

உணவு விடுதியாளர்களும் பிறரும் விவரங்களைக் கொடுப்பதற்குள்ள கடமைப் பொறுப்பு.

7. (1) வகுத்துரைக்கப்படலாகும் வளாகத்தில் இடவசதி அளிக்கப்பட்டுள்ள அயல் நாட்டினரைப் பொறுத்து, அத்தகைய தகவலை, அத்தகையவருக்கு மற்றும் அத்தகைய முறையில் அனுப்புவதானது, வெகுமதிக்காகத் தங்கும் அல்லது தூங்கும் இடவசதி அளிக்கப்பட்டுள்ள, அறைகளன் வசதி இருந்தாலும் அல்லது அறைகலன் வசதி இல்லாவிட்டாலும், வளாகம் எதனின் காப்பாளருக்கும் கடமையாகும்.

விளக்கம்.. இந்த உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள தகவலானது, அத்தகைய மனைவளாகத்தில் இடவசதி அளிக்கப்பட்டுள்ள அயல்நாட்டினர் அனைவருடனும் அல்லது அவர்களில் எவருடனும் தொடர்புடையதாக இருக்கலாம், மற்றும் காலமுறைகளில் அல்லது குறித்த நேரம் அல்லது நிகழ்வு எதிலும் அனுப்பப்படுமாறு வேண்டுறுத்தப்படலாம்.

(2) அத்தகைய வளாகம் எதிலும் இடவசதி அளிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவரும், உட்பிரிவு (1)இல் சுட்டப்பட்டுள்ள தகவலைக் கொடுக்கும் நோக்கத்திற்காக, அதன் காப்பாளரால் வேண்டுறுத்தப்படலாகும் விவரங்கள் அடங்கியிருக்கும் ஒரு விவரவுரையை அந்தக் காப்பாளருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(3) அத்தகைய ஒவ்வொரு மனைவளாகத்தின் காப்பாளரும், உட்பிரிவு (1)இன்படி அவரால் கொடுக்கப்பட்ட தகவலின் மற்றும் உட்பிரிவு (2)இன்படி அவரால் பெறப்பட்ட தகவலின் பதிவுக் குறிப்பை வைத்து வருதல் வேண்டும், மேலும் அத்தகைய பதிவுக் குறிப்பு, வகுத்துரைக்கப்படலாகும் முறையில் வைத்து வரப்பட்டு அத்தகைய காலத்திற்கு, பாதுகாக்கப்படுதல் வேண்டும். மற்றும் காவல் அலுவலர் எவராலும் அல்லது மாவட்டக் குற்றவியல் நடுவரால் இதற்கென அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒருவரால் எல்லா நேரங்களிலும், ஆய்வு செய்யப்படுவதற்கு வகைப்படுத்தல் வேண்டும்.

[2][(4) இதற்கென வகுத்துரைக்கப்பட்ட பகுதி எதிலும் வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பு, தொடர்புடையவர்களுக்குத் தகவல் கொடுப்பதற்கு அந்த அதிகாரஅமைப்பின் கருத்தில், மிக்க நலமானதாக இருக்கலாகும் முறையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் மூலம் குறித்துரைக்கப்படலாகும் வளாகத்தில் இடவசதி அளிக்கப்பட்ட அயல்நாட்டினரைப் பொறுத்த தகவலை அத்தகையவருக்கு மற்றும் அத்தகைய முறையில் அனுப்புவதானது, குடியிருப்பு மனை வளாகம், எதிலும் குடியிருக்கும் அல்லது அதனைத் தம் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டிருக்கும் ஒவ்வொருவரின் கடமையாகும் என்று பணிக்குமாயின், அவ்வாறு செய்தல் வேண்டும் மற்றும் உட்பிரிவு (1)இன் வகையங்கள் அத்தகைய மனைவளாகம் எதிலும் இடவசதி அளிக்கப்பட ஒவ்வொருவருக்கும் பொருந்தும்.

அயல் நாட்டினர் அடிக்கடி வந்து போகிற இடங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரம்.

[3][7 (அ). (1) வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பு, வகுத்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, ஓர் உணவுச் சாலை அல்லது பொதுமக்கள் கூடுமிடம் அல்லது கேளிக்கை இடம் அல்லது ஒரு குழு மனையாகப் பயன்படுத்தப்பட்ட மற்றும் அயல்நாட்டினர் அடிக்கடி வந்து போகிற வளாகம் எதனையும் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டிருக்கும் உரிமையாளரை அல்லது எவரையும்,

(அ) அத்தகைய வளாகத்தை முழுவதுமாகவோ, அல்லது குறித்துரைக்கப்பட்ட காலங்களின்போதோ மூடிவிடுமாறு, அல்லது

(ஆ) அத்தகைய வளாகத்தைக் குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளின்படி மட்டுமே பயன்படுத்துமாறு அல்லது பயன்படுத்த அனுமதிக்குமாறு, அல்லது

---

1. 38/1947 சட்டத்தின் பிரிவு 5 ஆல் உட்பிரிவுகள் (4) மற்றும் (5) புகுத்தப்பட்டன மற்றும் முதன் முதலிலிருந்த உட்பிரிவு (5) ஆனது (6) ஆக மறு எண்ணிடப்பட்டது.
2. 38/1947 சட்டத்தின் பிரிவு 6 ஆல் புகுத்தப்பட்டது
3. மேற்படி சட்டத்தின் பிரிவு 7 ஆல் புகுத்தப்பட்டது

(இ) அத்தகைய மனைவளாகத்தில் அயல் நாட்டினர் அனைவருமோ அல்லது குறித்துரைக்கப்பட்ட அயல் நாட்டினர் எவருமோ அல்லது அயல் நாட்டினரின் வகையினர் எவருமோ நுழைவதை அனுமதிக்க மறுக்குமாறு

பணிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி எவருக்குப் பணிப்புரை எதுவும் கொடுக்கப்பட்டுள்ளதோ அவர், அத்தகைய பணிப்புரை செல்லாற்றலில் இருக்கையில் வகுத்துரைக்கப்பட்ட அதிகாரஅமைப்பின் எழுத்து வடிவிலான முன் அனுமதியுடனும் அந்த அதிகாரஅமைப்பு விதிப்பதற்குப் பொருத்தமெனக் கருதலாகும் வரைக்கட்டுகள் எவற்றிற்கிணங்கவும் தவிர, மேற்சொல்லப்பட்ட நோக்கங்களில் எவற்றிற்காகவும் பிற மனைவளாகம் எதனையும் பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்தப்படுவதற்கு அனுமதித்தல் ஆகாது.

(3) உட்பிரிவு (1)இன்படி பணிப்புரை எதுவும் கொடுக்கப்பட்டுள்ள மற்றும் அதனால் குறையுற்றிருக்கிற எவரும், அத்தகைய பணிப்புரையின் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், மைய அரசாங்கத்திற்கு மேல்முறையீடு செய்யலாம்; மற்றும் அந்தப் பொருட்பாட்டில் மைய அரசாங்கம் செய்யும் முடிவு அறுதியானது ஆகும்.

நாட்டுரிமையைத் தீர்மானித்தல்.

8. (1) அயல் நாட்டினர் ஒருவர், ஒன்றிற்கு மேற்பட்ட அயல்நாட்டின் சட்டத்தின் வாயிலாக ஒரு நாட்டைச் சேர்ந்தவராக ஏற்பளிக்கப்படும் போது அல்லது அயல்நாட்டினர் ஒருவருக்கு நாட்டுரிமை, ஏதேனும் இருப்பின், எந்தக் காரணத்திற்காகவும் அந்த நாட்டுரிமை எதுவென்று குறித்துக் காட்டுவது ஐயப்பாட்டிற்குரியதாக இருக்குமிடத்து, வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பிற்கு அந்த அயல் நாட்டினர் எந்த நாட்டுடன் அப்போதைக்கு உரித்தத்தில் அல்லது பரிவில் மிக்க நெருக்கமான தொடர்புடையவராக தோன்றுகிறாரோ அந்த நாட்டின் அல்லது அந்த அயல் நாட்டினரின் நாட்டுரிமை ஐயப்பாட்டிற்குரியதாக இருக்குமாயின், அவர் எந்த நாட்டுடன் கடைசியாக அவ்வாறு தொடர்பு கொண்டிருந்தாரோ அந்த நாட்டின் நாட்டுரிமையுள்ளவராகக் கருதப்படலாம்.

வரம்புரையாக: அயல்நாட்டினர் ஒருவர், பிறப்பின் வாயிலாக ஒரு நாட்டுரிமையைப் பெற்றுள்ளவிடத்து அவர், மைய அரசாங்கம், பொதுவாகவோ அல்லது குறிப்பிட்ட நேர்வினோ அவ்வாறு பணிக்கிறவிடத்துத் தவிர, குடியுரிமை பெறுதல் மூலமாக அல்லது பிறவாறு ஏதாவது பிற நாட்டுரிமையை அவர் பின்னர் பெற்றிருக்கிறார். மற்றும் அவ்வாறு அவர் எந்த நாட்டின் நாட்டுரிமையைப் பெற்றிருக்கிறாரோ அந்த நாட்டின் அரசாங்கத்தால் பாதுகாக்கப்படுவதற்கு இன்னமும் உரிமை கொண்டவராக இருப்பதாக ஏற்பளிக்கப்பட்டுள்ளார் என்று, மேற்சொன்ன அதிகார அமைப்பு தெளிவுறக் காணும் வகையில் அவர் மெய்ப்பித்தாலன்றி, அந்த நாட்டுரிமையை அவர் தக்க வைத்துக் கொண்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி அளிக்கப்பட்ட நாட்டுரிமை பற்றிய முடிவு அறுதியானது ஆகும் மற்றும் நீதிமன்றம் எதிலும் மறுத்துரைக்கப்படுதல் ஆகாது:

வரம்புரையாக: மைய அரசாங்கம் தானே முற்பட்டோ அல்லது தொடர்புடைய அயல் நாட்டினரால் செய்யப்பட விண்ணப்பம் ஒன்றின் மேலே அத்தகைய முடிவு எதையும் திருத்தியமைக்கலாம்.

மெய்ப்பிக்கும் சுமை.

9. பிரிவு 8இன்கீழ் வந்தமையாத நேர்வு எதிலும், இந்தச் சட்டம் அல்லது 1/1872.
அதன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது கொடுக்கப்பட்ட பணிப்புரை எதையும் குறித்து, எவரும் அயல் நாட்டினரா இல்லையா அல்லது குறிப்பிட்ட வகை அல்லது விவரிப்புடைய அயல் நாட்டினரா இல்லையா என்று வினா எதுவும் எழுமாயின், அத்தகையவர் அயல் நாட்டினர் இல்லை என்று அல்லது, நேர்வுக்கேற்ப, குறிப்பிட்ட வகை அல்லது விவரிப்பையுடைய அயல் நாட்டினர் இல்லை என்று மெய்ப்பிக்கும் சுமை, இந்தியச் சாட்சியச் சட்டம், 1872இல் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், அத்தகையவரைப் பொறுத்ததாக அமையும்.

10. [சட்டம் பொருந்துவதிலிருந்து விலக்களிப்பதற்கான அதிகாரம்.] அயல்நாட்டினர் சட்டங்கள் (திருத்தம்) சட்டம், 1957 (11/1957)இன் பிரிவு 7ஆல் நீக்கறவு செய்யப்பட்டது. (19-1-1957இல் இருந்து செல்திறம் பெறுமாறு).

ஆணைகள் பணிப்புரைகள் முதலானவற்றைச் செல்திறப் படுத்துவதற்கு அதிகாரம்.

11. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களாலோ அல்லது அதன்வழியாலோ அல்லது அதைத் தொடர்ந்தோ பணிப்புரை எதையும் கொடுக்க அல்லது பிற அதிகாரம் எதையும் செலுத்த அதிகாரமளிக்கப்பட்ட அதிகார அமைப்பு எதுவும், இந்தச் சட்டத்தில் வெளிப்படையாக வகை செய்யப்பட்ட பிற நடவடிக்கை எதற்கும் கூடுதலாக அதன் கருத்தில், நேர்வுக்கேற்ப, அத்தகைய பணிப்புரைக்கு இணங்கியிருக்குமாறு செய்வதற்கு அல்லது அதன் மீறுகை எதையும் தடுப்பதற்கு அல்லது செவ்வைப்படுத்துவதற்கு அல்லது அத்தகைய அதிகாரத்தைத் திறம்படச் செலுத்துவதற்குத் தகுமானவரையில் தேவைப்படலாகும் நடவடிக்கைகளை எடுக்கலாம் அல்லது எடுக்குமாறு செய்யலாம் மற்றும் அத்தகைய ஆற்றலைப் பயன்படுத்தலாம் அல்லது பயன்படுத்துமாறு செய்யலாம்.

(2) காவல்துறை அலுவலர் எவரும், தம் கருத்தில், இந்தச் சட்டத்தின் வகையங்களின்படி அல்லது அவற்றைத் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது கொடுக்கப்பட்ட பணிப்புரை எதற்கும் இணங்கியிருக்குமாறு செய்வதற்கு அல்லது அத்தகைய ஆணை அல்லது பணிப்புரையின் மீறுகை எதையும் தடுப்பதற்கு அல்லது செவ்வைப்படுத்துவதற்குத் தருமானவகையில் தேவைப்படலாகும் நடவடிக்கைகளை எடுக்கலாம் மற்றும் அத்தகைய ஆற்றலைப் பயன்படுத்தலாம்.

(3) இந்தப் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரமானது, ஏதேனும் நிலத்தை அல்லது எதுவேயாயினதுமான பிற சொத்தை அணுகும் உரிமையை, அந்த அதிகாரத்தைச் செலுத்திச் செயற்படுகிற எவருக்கும் வழங்குவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

அதிகார அமைப்பிற்கு ஒப்படைவு செய்வதற்கான அதிகாரம்.

12. எந்த அதிகாரஅமைப்பிற்கு, இந்தச் சட்டத்தின் வாயிலாக அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனின் வாயிலாகவும் பணிப்புரை, இசைவு அல்லது அனுமதி எதையும் பிறப்பிப்பதற்கு அல்லது கொடுப்பதற்கு அல்லது பிற செயல் எதையும் செய்வதற்கு அதிகாரம் எதுவும் வழங்கப்பட்டுள்ளதோ அந்த அதிகாரஅமைப்பு, மாறாக வெளிப்படையான வகையம் செய்யப்பட்டிருந்தாலன்றி, அதன் சார்பாக அத்தகைய அதிகாரத்தைச் செலுத்துவதற்கு அதற்குக் கீழமைந்த அதிகாரஅமைப்பு எதற்கும் எழுத்து வடிவில், வரைக்கட்டுடனோ அல்லது பிறவாறாகவோ, அதிகாரமளிக்கலாம் மற்றும் அதன்பேரில் சொல்லப்பட்ட கீழமைந்த அதிகாரஅமைப்பு, அதிகாரமளிப்பில் அடங்கியிருக்கலாகும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ அத்தகைய அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிற அதிகார அமைப்பாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

இந்தச் சட்டத்தின் வகையங்கள் முதலானவற்றை மீறுவதற்கான முயற்சிகள் முதலானவை.

13. (1) இந்தச் சட்டத்தின் அல்லது அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது கொடுக்கப்பட்ட பணிப்புரை எதனின் வகையங்களையும் மீற முயற்சி செய்கிற அல்லது அந்த மீறுகைக்கு உடந்தையாய் இருக்க அல்லது உடந்தையாய் இருக்க முயற்சி செய்கிற அல்லது அதற்கு முன்னேற்பாடான செயல் எதையும் செய்கிற அல்லது அத்தகைய ஆணை எதையும் தொடர்ந்து கொடுக்கப்பட்ட பணிப்புரை எதற்கும் இணங்கி நடக்கத் தவறுகிற எவரும், இந்தச் சட்டத்தின் வகையங்களை மீறியுள்ளதாகக் கொள்ளப்படுவார்.

(2) இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது கொடுக்கப்பட்ட பணிப்புரை எதனின் வகையங்களை பிற எவரும் மீறியுள்ளார் என்று நம்புவதற்குத் தகுமான காரணத்தை அறிந்திருந்து அல்லது கொண்டிருந்து, சொல்லப்பட்ட மீறுகைக்கான, அவரைக் கைது செய்வதை/விசாரணை செய்வதை அல்லது அவருக்குத் தண்டனை அளிப்பதைத் தடை செய்யும் அல்லது பிறவாறு தலையிடும் உட்கருத்துடனான உதவி எதையும் அந்தப் பிற எவருக்கும் செய்கிற எவரும், அந்த மீறுகைக்கு உடந்தையாக இருந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) பிரிவு 3இன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது அதனைத் தொடர்ந்து கொடுக்கப்பட்ட பணிப்புரை எதையும் மீறி எந்தக் கலத்தின் அல்லது வானூர்தியின் மூலம் அயல்நாட்டினர் எவரும் [1][இந்தியா]விற்குள் நுழைகிறாரோ அல்லது அதிலிருந்து வெளியேறுகிறாரோ அந்த ஏதேனும் கலத்தின் முதல்வர் அல்லது, நேர்வுக்கேற்ப, ஏதேனும் வானூர்தி ஓட்டுநர் சொல்லப்பட்ட மீறுகையைத் தடுப்பதற்கு தாம் உரிய முயற்சி அனைத்தையும் மேற்கொண்டார் என்று அவர் மெய்ப்பித்தாலன்றி, இந்தச் சட்டத்தை மீறியுள்ளதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தண்டனைகள்.

14. எவரும் இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதனின் அல்லது இந்தச் சட்டம் அல்லது அத்தகைய ஆணையை தொடர்ந்து கொடுக்கப்பட்ட பணிப்புரை எதனின் வகையங்களையும் மீறுவாராயின், அவர் ஐந்து ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும், மற்றும் பணத்தண்டத்திற்கு உள்ளாதலும் வேண்டும்; மற்றும் அத்தகையவர் பிரிவு 3இன் உட்பிரிவு (2)இன் கூறு (ஊ)வினைத் தொடர்ந்து முறி ஒன்றை எழுதிக் கொடுத்திருப்பாராயின், அவருடைய முறி தண்ட இழப்பாக்கப்படுதல் வேண்டும். மேலும் அதற்குக் கட்டுப்பட்டிருக்கிற எவரும் அதற்கான தண்டத்தைச் செலுத்துதல் வேண்டும் அல்லது அத்தகைய தண்டம் ஏன் செலுத்தப்படலாகாது என்று, குற்றவாளி குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிமன்றம் தெளிவுறக் காணமாறு காரணம் காட்டுதல் வேண்டும்.

இந்தச் சட்டத்தின்படி செயற்படுபவர்களுக்குப் பாதுகாப்பு.

15. இந்தச் சட்டத்தின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் எவருக்கும் எதிராக உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

பிற சட்டங்களின் பொருந்துவதற்குத் தடை செய்யாதிருத்தல்.

16. இந்தச் சட்டத்தின் வகையங்கள், அயல்நாட்டினர் பதிவுச் சட்டம், 1939இன், இந்தியக் கடவுச் சீட்டுச் சட்டம், 1920இன் மற்றும் நிகழுறு காலத்தில் செல்லாற்றலிலுள்ள பிற செய்சட்டம் எதனின் வகையங்களுக்கும் கூடுதலாக, ஆனால் அவற்றைக் குறைவுறச் செய்யாமல் இருத்தல் வேண்டும்.

நீக்கறவுகள்.

17. (நீக்கறவு செய்யப்பட்டது.) நீக்கறவு செய்தல் மற்றும் திருத்தம் செய்தல் சட்டம், 1950 (35/1950) ] பிரிவு 2இன் மற்றும் இணைப்புப்பட்டியல் 1இன் மூலம் நீக்கறவு செய்யப்பட்டது. (19.4.1950).

---

1. 38/1947 சட்டத்தின் பிரிவு 3 ஆல் "பிரிட்டிஷ் இந்தியா" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.